SRI R. PONNAPPA NADAR : Sir, is there any proposal to bring in fresh legislation ?

THE HON SRI R. VENKATARAMAN : No, Sir.

தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ் வீடு ஒதுக்கீடு.

***187 கேள்வி.—திரு. மு. கருணாநிதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள வீட்டு வசதிக் கழகம் ஆகஸ்டு 64 முடிய, பொது மக்களுக்குத் தவணை முறையில் கொடுப்பதற்காகக் கட்டிய வீடுகள் எத்தனை ?

(இ) தவணை முறையில் வீடுகளைக் கொடுப்பதில் உள்ள குறைகள் குறித்து அரசாங்கத்திற்கு ஏதேனும் புகார் வந்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அந்தப் புகாரின் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) அத்தகைய வீடுகள் 1,856 ஆகும்.

(இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

வட சேலத்தில் தொழில்கள் துவங்குதல்

***188 கேள்வி.—திரு. ம. கமலநாதன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அண்மையில் சேலத்தில் நடைபெற்ற கைத்தொழில் வளர்ச்சி கருத்தரங்கில் வட சேல மாவட்டத்தில் என்னென்ன தொழில்கள் ஆரம்பிக்க சிபாரிசு செய்யப்பட்டுள்ளது ?

(இ) அவைகளில் அரசினர் பரிசீலனையில் உள்ள புதிய தொழிற் சாலைகள் யாவை ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) சேலத்தில் அண்மையில் நடைப்பெற்ற தொழிற் கருத்தரங்கில் பல்வேறு கனரக நடுத்தர, சிறிய தொழிற்சாலைகள் சேலம் மாவட்டத்தில், நிறுவுவதற்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. சிபாரிசு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் எங்கெங்கு நிறுவுவது என்பது குறித்து ஆராய்வதற்கு ஒரு குழு கலெக்டரால் அங்கே அமைக்கப்படவிருக்கிறது.

திரு. ம. கமலநாதன் : சேலம் மாவட்டத்திற்கு ஒரு தனிப் பெருமை தருவது பழவகைகள் மிக அதிகமாகக் கிடைக்கிறது எனபதுதான். 45,000 மாம்பழமும், 47,000 டன்கள் வாழையும் 2,800 டன்கள் புளியும் அங்கே இருப்பதால், அமெரிக்கக் கூட்டுறவுடன் ஒரு பெரிய "ப்ரூட் கானிங் இன்டஸ்டிரி" நிறுவ வாய்ப்பு இருக்கிறதென்று அறிகிறேன். அப்படி ஒரு பெரிய தொழில்சாலையை கிருஷ்ணகிரியில் அமைக்க அரசினர் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தவிதமான "ப்ரூட் கானிங் இன்டஸ்டிரி" இப்போது கிருஷ்ணகிரி தொழிற்பேட்டையில் அமைக்கத் தனியார் துறையில் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதற்கு வேண்டிய எல்லா உதவியையும் செய்வதாகச் சர்க்கார் அவர்களுக்கு வாக்களித்து இருக்கிறது.

திரு. ம. கமலநாதன் : அமைச்சர் தனியார் துறையில் அமைக்கப்பட இருக்கும் "ப்ரூட் கானிங் இன்டஸ்ட்ரி" பற்றிச் சொன்னார்கள். அது "ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரி" 5 லட்சம் ரூபாய் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. "டிஹைட்ரேடெட்" வகையில் தயாரிக்கப்படுவதற்கு ரூ. 50